## வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை : சா.மார்ஸ்

ந.க.எண். 4516/ஆ3/2017, நாள். 17.01.2018

பொருள் : ரெட்கிராஸ் இயக்கம் – ஜெ.ஆர்.சி.ஆலோசகர்களுக்கு 1 நாள் பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கம் 19.01.2018 அன்று நடைபெறுதல் விடுபட்ட பள்ளியிலிருந்து ஒரு ஆலோசகர் தவறாது பங்கேற்கும் வகையில் விடுவித்து அனுப்ப கோருதல் – சார்பு.

பார்வை : 1.பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.004/எல்/இ1/2018 நாள்.05.01.20182.

2.ஜேஆர்சி மாவட்ட நிர்வாகிகள் கூட்டம் நாள்.10.01.2018

பார்வையில் கண்டுள்ள பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி இளம் செஞ்சிலுவை சங்கம் அனைத்துப்பள்ளிகளிலும் செயல்படுத்த அறிவுரை வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் வேலூர் மற்றும் திருப்பத்தூர் கல்வி மாவட்டத்திலுள்ள அனைத்து வகை அரசு / நிதியுதவி / நகரவை / வனத்துறை / சுயநிதி / உயர் / மேனிலை /மெட்ரிக் பள்ளி ஜெ. ஆர். சி ஆலோசகருக்கு1 நாள் பயிற்சி முகாம் மற்றும் கருத்தரங்கம் 19.01.2018, வெள்ளிக்கிழமை அன்று காலை 10.00 மணிக்கு வேலூர் அரசு முஸ்லீம் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற உள்ளது.

ஏற்கெனவே காட்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 2017 அக்டோபர் 26 மற்றும் 27 ஆகிய இரு நாட்கள் நடைபெற்ற பயிற்சி முகாமில் பள்ளிகள் சார்பாக ஆலோசகர்கள் பங்கேற்றவர்கள் பங்கேற்க தேவையில்லை. பங்கேற்காத பள்ளியிலிருந்தும் ஒரு பள்ளிக்கு ஒரு ஆலோசகர் தவறாது பங்கேற்கும் வகையில் விடுவித்து அனுப்பிடுமாறு சம்மந்தப்பட்ட தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

ஜெ.ஆர்.சி முகாம் கட்டணம் ஒரு ஆசிரியருக்கு/ஆலோசகருக்கு ரூ.100/– வீதம் பள்ளியின் ஜெ.ஆர்.சி. தொகுப்பு நிதியிலிருந்து ஆலோசகர் / பொறுப்பாசிரியர் வசம் கொடுத்தனுப்புமாறு தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் பள்ளியின் மாநில பதிவுக்கட்டணம் ரூ.50/- மற்றும் பத்து சதவிகித ஜெஆர்சி கட்டணம் ஏற்கெனவே செலுத்தியுள்ள பள்ளிகள் தவிர கட்டணம் செலுத்தாத பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் பள்ளிகள் முகாமில் பங்கேற்க வரும் ஆலோசகர்கள் வழியாக செலுத்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். பயிற்சி பங்கேற்க வரும் அனைவரும் ஜெ.ஆர்.சி. சீருடையில் முகாமில் தங்கள் பெயர்களை பதிவு செய்துக்கொள்ளத்தக்கவாறு வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

முகாமில் பங்கேற்க வரும் ஆலோசகர் அனைவருக்கும் பிற்பகல் மதிய உணவு, தேனீர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்

பெறுநர்

தலைமையாசிரியர், அனைத்து வகை பள்ளிகள்,

சார்ந்த ஆலோசகர்கள் / பொறுப்பாசிரியர்கள், (தலைமையாசிரியர்கள் மூலமாக)

பயிற்சி நடத்திட சார்ந்த ஜே.ஆர்.சி.யின் கல்வி மாவட்ட அமைப்பாளர்கள்

நகல் :

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை அவர்களுக்கு தகவலுக்காகபணிந்தனுப்பலாகிறது.

நகல் :

தலைமையாசிரியர், அரசு முஸ்லீம் மேல்நிலைப்பள்ளி, வேலூர் (முகாம் பணிகள் ஏற்பாடு செய்ய தலைமையாசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது)